# புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

# 2023ஆம் வருடத்திற்கான வழங்குநர்களை பதிவு செய்தல்

பத்தரமுல்ல, செத்சிறிபாய, 08ஆம் மாடியில் அமைந்துள்ள புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் 2023 வருடத்தில் பின்வரும் பொருட்கள் சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக தகுதியான நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொருட்கள்**

1. அனைத்து வகையான அலுவலக காகிதாதிகள்
2. கணனி, புகைப்படப் பிரதி இயந்திரங்களுக்குத் தேவையான துணைப்பாகங்கள் மற்றும் காகிதாதிகள் (டிஸ்கட், ரிபன், டோனர், மற்றும் காகித வகைகள்)
3. அனைத்து வகையான அலுவலகத் தளபாடங்கள். (மரம், உலோகம் மற்றும் ஏனையவை.)
4. அலுவலக உபகரணங்கள் (கணனி இயந்திரம், புகைப்படப்பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், மல்டிமீடியா இயந்திரம், கெமரா உபகரணம், ஒலிபெருக்கி இயந்திரம், மற்றும் துணைப்பாகங்கள் உள்ளிட்ட அனைத்து விதமான கட்புல, செவிப்புல உபகரணங்கள் போன்றவை.)
5. கணனி சார்ந்த துணைப்பாகங்கள் (USB Pen Drive, Wi-Fi dongle, Internet (4G) Dongle Anti-Virus Software, Network Accessories)
6. டயர், டியூப் மற்றும் பற்றரி போன்றவற்றை வழங்கல்.
7. வளிச்சீராக்கி இயந்திரங்கள் வழங்குதல்.
8. மின்சார உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (குளிர்சாதனப்பெட்டி, மின்விசிறி, மின்சார கேத்தல், தொலைக்காட்சிப் பெட்டி உள்ளிட்ட அனைத்து வகையான மின்சார உபகரணங்கள், மற்றும் அது தொடர்பான அனைத்து மின்சார உபகரணங்கள்)
9. கட்டிடங்களுக்கான நிறப்பூச்சி மற்றும் நிறப்பூச்சிற்குத் தேவையான உபகரணங்கள் (திஸ்ஸமஹாராம பிரதேசம் விரும்பத்தக்கது)
10. டீ சேர்ட், கெப் (தொப்பி) தயாரித்தல் மற்றும் ஊழியர்களுக்கான சீருடைத் துணிகளை வழங்கல்.
11. ஒப்பனை, மேடை பின்புல வடிவமைப்பு, நடனம் மற்றும் நாடக ஆடை அணிகலன்கள், நடனத் துறை மற்றும் நாடகம் தொடர்பாகத் தேவைப்படும் நடிப்புத்துறை பொருட்களை வழங்குதல்.
12. பெயர்ப்பலகை, மற்றும் நினைவுப் படிவங்களைத் தயாரித்தல்.
13. கேடயங்கள், கிண்ணங்கள் மற்றும் பதக்கங்களை வழங்குதல்.
14. கீழைத்தேய மற்றும் மேலைத்தேய வாத்தியக் கருவிகள் மற்றும் இசைக் கருவிகளை வழங்குதல்.
15. முன்பள்ளி சிறார்களுக்கான விளையாட்டு முற்றம் உட்பட முன்பள்ளிக்குத் தேவைப்படும் அனைத்துத் துணைப்பாகங்களையும் வழங்குதல்.
16. ‘பிரிகர’ மற்றும் பூஜைப் பொருட்களை வழங்குதல்.

**02. ஆலோசனை அற்ற சேவைகள்:**

1. பாதுகாப்புச் சேவை
2. துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்புச் சேவைகள்.
3. அனைத்துவிதமான அச்சிடும் வேலைகள் (புத்தகங்கள், விளம்பரக் குழு, கட்டவுட், பெனர், அழைப்பிதழ்கள், சான்றிதழ்கள் மற்றும் அனைத்து டிஜிட்டல் அச்சிடும் நடவடிக்கைகள் மற்றும் பிளாஸ்டிக் எழுத்துக்கள் போன்றவை.)
4. கிரபிக் நிர்மாண விடயங்கள் (அழைப்பிதழ், சுவரொட்டி, பாதாகை, விருதுகள் மற்றும் புத்தகம் கட்டுதல்)
5. புகைப்படம் அச்சிடுதல், அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல்.
6. கணனி இயந்திரம், வீடியோ உபகரணம், டிஜிட்டல் கெமரா, புகைப்படப்பிரதி இயந்திரம் மற்றும் அதனோடிணைந்த அனைத்து இலத்திரனியல் உபகரணங்களின் திருத்தவேலைகள்
7. அனைத்து வகையிலான அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (தளபாடங்கள், வளிச்சீராக்கி இயந்திரங்கள், குளிர்சாதனப் பெட்டி, மின்விசிறி, மின்சாரக் கேத்தல், தொலைக்காட்சிப் பெட்டி உட்பட அனைத்து வகையிலான மின்சார உபகரணங்களும் உட்பட.)
8. ஒப்பனை, மேடை பின்புல வடிவமைப்பு, நாட்டியங்களுக்குத் தேவைப்படும் உபகரணங்களை வழங்குதல், நடிப்புக் கலை அணிகலன்கள் மற்றும் நடிப்பு தொடர்பான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் உள்நாட்டு சாந்தி கருமங்களுக்கான விலைமனுக் கோரல்.
9. அனைத்து வகையிலான வாத்தியக் கருவிகள் மற்றும் இசைக்கருவிகளின் திருத்தவேலைகள்
10. வைபவங்களுக்கான மேடைகள், கதிரைகள், கூடாரம், ஜெனரேட்டர், நீர் பவுசர் நீர்த்தாங்கி, தற்காலிக கழிவறைகள் போன்றவை மற்றும் அது சார்ந்த அனைத்துப் பொருட்களையும் வழங்குதல்
11. வைபவங்களுக்கான அலங்கார பூவேலைப்பாடு மற்றும் அலங்கார மலர்கள் உட்பட ஏனைய அலங்கார பொருட்களை வழங்கல்.
12. வைபவங்களுக்கான உணவு, பானங்கள் மற்றும் குடிநீர் போத்தல்களை வழங்குதல்
13. வெயாங்கொடை பயிற்சி நிலையத்தின் உற்சவங்களுக்கான உணவை வழங்குவதற்கு பிரதேச வாரியாக பதிவு செய்தல்
14. நடன உடைகள் மற்றும் ஏனைய அழுக்குத் துணிகளை சலவை செய்தல்
15. நடன உடைகள் மற்றும் சீருடைகளைத் தைத்தல்/ அமைத்தல்
16. மேடை பின்புலத்தை வடிவமைத்தல் மற்றும் அது தொடர்பான பொருட்கள் வாடகை அடிப்படையில் வழங்குதல்
17. போக்குவரத்து மற்றும் நிர்மாண வேலைகளுக்கு வாகனம் மற்றும் இயந்திராதிகளை வாடகைக்கு வழங்குதல்.
18. கட்டிட நிர்மாணம் தொடர்பான ஆலோசனைச் சேவையை வழங்குதல்
19. வாகன திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல், வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள் மற்றும் வாகனங்களில் அனைத்து வகையான குஷன் வேலைகள்.
20. போக்குவரத்து வழங்கல், நாடு முழுவதும் அமைந்துள்ள கலாசார நிலையங்களிலிருந்து - வேன் (12, 15 இருக்கைகள் கொண்டவை.) பஸ் மற்றும் சிறியளவிலான லொறி வண்டிகள்.
21. பயிற்சி நிலையங்களில் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான இடவசதிகள், உணவு, தங்குமிடங்களை வழங்குதல், சாந்திகர்மங்களை மேற்கொள்ளல் - மலைநாடு/ கீழைநாடு/ சப்ரகமுவ.
22. வடிவமைப்பு கலைஞர்கள், வாஸ்து சாஸ்திர கலைஞர்கள் மற்றும் சிவில் பொறியியலாளர்கள்.
23. மின்சார இயந்திரவியல் பொறியியலாளர்கள்.
24. பிரசாரம், ஊக்குவிப்பு தொடர்பான சேவைகள்.
25. வைபவ முகாமைத்துவ விடயங்கள் (Event Managing)

* 02 ஆலோசகர் இன்றிய சேவை கீழாக, காட்டப்பட்டுள்ள 01/02/09/12/14/16/20 சேவைகள் தொடர்பாக மாவட்ட மட்டம் விசேடமானதாகும்.

**03. வேலைகள்**

1. கட்டிடங்களின் திருத்த வேலைகள் மற்றும் சிறிய நிர்மாணங்கள் (ICTAD நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டுள்ளமையை காண்பிக்கும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்)
2. கட்டிட உள்ளகத்திற்கு முன்தயாரிக்கப்பட்ட விடயங்கள் மற்றும் அதுபற்றிய திருத்த வேலைகள்

**04. ஆலோசனைச் சேவைகள்**

1. பதவி நிலையினர் கொள்ளளவு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.
2. வெளியக பயிற்சி செயலமர்வுகள் (Outbound Training)
3. இணையதளங்களை அமைத்தல் மற்றும் புனரமைத்தல்

05. அனைத்து வகையான கட்டிட நிர்மாணப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குதல்

1. அமரதேவ அசபுவ நிலையத்தின் நிர்மாண வேலைகளுக்கு பிரதேச வழங்குநர்களைப் பதிவு செய்தல்

**பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள்**

1. 2023ஆம் வருடத்தில் இந்த அமைச்சிற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளை வழங்குவதற்காக பதிவு செய்து கொள்ள ஆர்வங்காட்டும் வழங்குநர்கள், வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்து அதற்குத் தேவையான விண்ணப்பப் பத்திரத்தை, 1,000.00 ரூபா பணத்தைச் (மீளளிக்கப்படாத ஆயிரம் ரூபா) செலுத்தி கணக்காளரிடமிருந்து (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.
2. பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பிரதியுடன் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை, 2022.11.11ஆம் திகதி முதல் 2022.12.01ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 3.00 வரை பெறுகைப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
3. ஒவ்வொரு உருப்படிக்காகவும் வெவ்வேறாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. தமது விண்ணப்பத்துடன் வியாபாரப் பதிவுச்சான்றிதழின் புகைப்படப்பிரதி மற்றும் இயைபுடைய துறையில் மூன்று (03) வருட கால அனுபவம் தொடர்பான சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
5. பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை, 2022.12.15ஆம் திகதி வரை ‘தலைவர், பெறுகைக்குழு, புத்தசாசன மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, 08ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல’ என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கிவரும் கடிதவுறையில் ‘வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2023’ எனக் குறிப்பிட வேண்டும். இந்த வருடத்திற்கு பதிவு செய்து கொண்டுள்ள விண்ணப்பதாரர்களும் 2022ஆம் வருடத்திற்காக மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களுக்கு மேலதிகமாக இலங்கை தொலைபேசி விபரக்கொத்தின் ரெயின்போ பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வழங்குநர்களிடமிருந்தும் விலைகளைக் கோரும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
7. நிர்ணயிக்கப்பட்ட வேளையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்காத அல்லது குறித்த நேரத்திற்கு பொருட்கள் ஒப்படைக்காத அல்லது விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிபந்தனைகளைக் கடைப்பிடிக்காத வழங்குநர்களின் பதிவு முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
8. வழங்கல்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக முற்பணத் தொகை செலுத்தப்படமாட்டாததுடன் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கியதன் பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக தகவல்களை, கணக்காளர் (பெறுகை) (0112875408) மற்றும் பெறுகைப் பிரிவைத் தொடர்பு கொண்டு (011-2862675) பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு,**
**08ஆம் மாடி, செத்சிறிபாய,**
**பத்தரமுல்ல.**